S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை – 600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**
No. 147, Thirunilai colony,
vichoor post, chennai - 600 103
E-Mail : sdanielsampathkumar@gmail.com
Website : danielendtimebooksministry.org
Phone No : 99419 74213, 96001 71260

TAMIL

# The Spoken Word

by

WILLIAM MARRION BRANHAM

# சாட்சி-1

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**"உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து"**

# சாட்சி-1

எனவே நான்... இது தான் அந்த தரிசனம். நான் என் வீட்டில் இருக்கும்போது அந்த தரிசனத்தைக் கண்டேன். ஒரு புகைவண்டி (train) நிறுத்தப்பட்டிருந்தது என்று நான்-நான் நம்புகிறேன். அங்கே அது இருந்தது. (நீங்கள் இதை கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அப்பொழுது நீங்கள் இதை அறிந்துகொள்வீர்கள்). கிராக் என்று நாம் அழைக்கிற முறையில் முடியை வெட்டியிருந்த, பழுப்பு நிற கண்களையுடைய ஏறக்குறைய எட்டு வயதான ஒரு சிறு பையனைக் கண்டேன். ஒரு சிறு பையன். அவன் ஒரு கார் விபத்தில், கார் மோதி மோசமாக தாக்கப்பட்டிருந்தான்.

அவன் சிறு பையன்கள் அணிவதற்கு பயன்படுத்தும் பான்டிவெய்ஸ்ட் என்று அழைக்கப்படுகிற காரியத்தை இங்கே இதைப்போன்ற அந்த சிறு இடுப்புப் பகுதிக்கு மேலே அதைச் சுற்றிலும் பொத்தான்களைக் கொண்ட அல்லது சிறு பையன்கள் அணிவதற்கு பயன்படுத்தும் காரியத்தை எல்லா பக்கங்களிலும் கொண்ட சிறிய குட்டையான கால்சட்டைகளை (pants) அணிந்திருந்தான். நான் சிறு பையனாக இருந்த போது அதை அணிந்திருக்கிறேன். எனவே அவர்கள் பெரிய பொத்தான்களை இதைப் போன்று சுற்றிலும் வைத்து தைத்திருப்பார்கள். அவன் உண்மையாகவே நீளமான கெட்டியான காலுறைகளை கொண்டிருந்தான். அவனுடைய சிறு காலானது அவனுடைய காலுறைக்குள்ளே இருந்தது. அவ்விடம் அநேக பாறைகளை உடையதாயிருந்தது. அது கரடுமுரடான பாறைகள் நிறைந்த பிரதேசமாகவும், எப்பொழுதும் பச்சைபசேலென நின்றுகொண்டிருக்கிற சில மரங்களைக் கொண்டதாகவும் தோற்றமளித்தது. மேலும் அந்த சிறு பையன் மரணத்திலிருந்து உயிர்பெற்று எழுந்ததையும் கண்டேன்.

நான் வந்து, மியாமியில் நடந்த கூட்டத்தில் நான் அதைக்குறித்து பேசினதைக் கேட்ட ஜனங்கள் இன்றிரவு இங்கே சரியாக உட்கார்ந்து கொண்டிருக்கலாம். நான் இந்த விவரணத்தை கொடுப்பதற்கு முன்னால், மியாமி கூட்டத்தில் அந்த தரிசனத்தைக் குறித்தும் அது அப்படியே சம்பவித்ததைக் குறித்தும் நான் கூறக்கேட்ட யாராவது இங்கிருக்கிறீர்களா என்று நான் வியக்கிறேன். உங்கள் கரத்தை



என்றேன். மேலும் நான், ‘‘இப்பொழுது எல்லோரையும் அமைதியாய் இருக்கச் செய்யுங்கள்’’ என்றேன். அவர்கள் அவனை எடுத்துக் கொண்டு செல்ல விரும்பினர். ‘‘நான் முழங்கால்படியிடும்படி எப்படியாக கர்த்தர் என்னிடம் கூறினார் என்பதை நான் அறிவேன்’’ என்றேன். இந்த சிறு பையனுக்காக ஜெபிக்கும்படி நான் முழங்காற்படியிட்டேன்.

நான், ‘‘பரலோக பிதாவே, சுமார் இரண்டரை வருஷங்களுக்கு முன்னால், என்னுடைய தாய்நாடான அமெரிக்காவிலுள்ள ∴புளோரிடாவில் அந்த தரிசனத்தில் இந்தப் பையனை நீர் எனக்குக் காண்பித்தீர், என்ன சம்பவிக்கும் என்று நீர் சொன்னபடியே எல்லாக் காரியங்களும் அப்படியே மிகச்சரியாக சம்பவித்தன. மேலும் இப்பொழுது, நான் உம்முடைய ஊழியக்காரனாக உம்முடைய ஸ்தானத்தில் இங்கிருக்கிறேன், நீர், ‘வியாதியஸ்தர்களை சொஸ்த மாக்குங்கள், மரித்தவர்களை எழுப்புங்கள், குஷ்டரோகிகளை சுத்தமாக்குங்கள், பிசாசுகளை விரட்டுங்கள், இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய் கொடுங்கள்’ என்றீர். எனவே உம்முடைய வார்த்தையின் பேரிலும் ஒரு தரிசனத்தின் மூலம் நீர் உரைத்த உம்முடைய வார்த்தையின் பேரிலும் நான் உமக்குப் பதிலாக , இந்தப் பையனைக் கட்டியிருக்கிற மரணத்தினிடம், ‘நீ இனிமேலும் அவனை கட்டி வைக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவனைக் கட்டவிழ்க்கிறேன்’ என்று கூறுகிறேன்’’ என்று கூறினேன்.

உடனே அந்தப்பையன் தன்னுடைய காலில் குதித்தெழுந்து சத்தமிட்டு கூச்சலிட்டவாறே அவனால் முடிந்த அளவு ஓடினான். அந்த எல்லா பின்லாந்துக்காரர்களும் தொடர்ந்து அழுது கூச்சலிட்டு கொண்டிருந்தனர். அதை உங்கள் ஜீவியத்தில் கேட்டிருக்கவே மாட்டீர்கள். அந்த சிறு பையன் என்ன சம்பவித்திருந்தது என்பதையும் அறியாமல் சுற்றிலும் ஓடினான். அது எப்படி செய்யப்பட்டது நண்பர்களே? என்னைக் கேட்காதீர்கள். என்னால் உங்களிடம் கூற முடியாது....

**மரித்த பையன் உயிரோடு எழும்புதல்** (டிசம்பர் 3,1953)

TESTIMONY (RAISING DEAD BOY)-53-1203

தலைமயிர், சிறு கிராக முறையில் தலைமயிர் வெட்டப்பட்டிருத்தல், பழுப்புநிற கண்கள், ஒரு சாலையோரத்தில் கிடத்தல்'' என்றேன்.

நான்,''அதோ அங்கேயுள்ள வளைந்திருக்கும் மரங்களைப் பாருங்கள். பாருங்கள்? நான் கூறின அந்த பாறைகளையும் அந்த மரங்களையும் பாருங்கள். ஒரு விபத்தில் கொல்லப்பட்டு, சாலையோரத்தில் மரித்தவனாக கிடந்து சுமார் முப்பது நிமிடங்கள் ஆகிறது, என்பதைப் பாருங்கள். அவனுடைய சிறு கைகளும், சிறு கால்களும் இதைப் போன்று இடித்து தள்ளப்பட்டிருந்தது'' என்றேன். நான், ''அது இந்தப் பையன் தான்'' என்று கூறினேன். அவர்கள், ''நல்லது, சகோதரன் பிரான்ஹாம், அது நீர் சொன்னதுடன் பொருந்துகிறது'' என்றனர். நான், ''அது அவன் தான்'' என்றேன். ஓ, என்னே... .உலகத்தில் யாருமில்லை. நான் இப்பொழுது உணர்ச்சிவசப்பட்டிருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் நான் அப்படியில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார் என்று அறியும் போது அது அப்படியே என்னை சிலிர்ப்பூட்டுகிறது. இந்த மற்ற மார்க்கத்தாரின் மார்க்கங்களெல்லாம் தவறாயிருக்கின்றன. அங்கே ஒரே ஒரு உண்மையான ஜீவிக்கும் தேவன் மாத்திரமே உண்டு, அவருடைய குமாரன் தான் கிறிஸ்துவாகிய இயேசு. அது சரியே. அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார், அவர் தம்முடைய தன்மையோடு நம்மிடம் கிருபையாயிருந்தார். ஆமென். ஓ, என்னே. இந்த காரியங்களில் எத்தனையோ சம்பவித்துவிட்டன. இது என்னுடைய வாக்குமூலம் மாத்திரமல்ல, சகோதரனே முழு பின்லாந்து அரசாங்கமும் இதை அறிந்துள்ளது. மேலும் அங்கே... நான் அங்கிருந்த அந்த சிறு பையனை நோக்கிப்பார்த்து, ''அது அவன் தான்'' என்றேன். அவர்கள், ''அவன் ஜீவிக்கப் போகிறான் என்றா சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்கள். நான், **''இந்தப் பையன் அடுத்த சில நிமிடங்கள் உயிரோடு எழும்பவில்லையெனில், நான் ஒரு கள்ளத் தீர்க்கதரிசியென்று ஒரு அடையாளத்தை என் முதுகில் குத்திவிடுங்கள். அது அந்தப் பையன் தான். அவன் ஜீவிக்கப் போகிறான்'' என்றேன்.** அவர்கள், ''அவன் எப்படி ஜீவிக்க முடியும்? அவன் கூழாக்கப்பட்டு கிடப்பதை நோக்கிப் பாருங்கள்'' என்றனர். நான், ''அவன் ஜீவிக்கிறானா இல்லையாவென்று நீங்கள் பாருங்கள்''



உயர்த்துங்கள். அங்கே பாருங்கள். சுற்றிலும் எல்லாப் பக்கங்களிலும் ஒவ்வொரு இடத்திலும். சரி. மியாமியில் நடந்த கூட்டத்தில் ... நான், ''ஏதோவொரு நாளில் 'சுகமளித்தலின் சத்தம்' பத்திரிகையிலும் அது வெளிவரும். தேவன் என்ன கூறினாரோ அது சம்பவிக்கிறது. அது தவறிப்போக வழியே இல்லை. தேவன் உரைத்தது அப்படியே நிறைவேற வேண்டியுள்ளது'' என்றேன்.

நல்லது, உங்களில் அனேகர் அதே கூட்டத்தில்.... ஐ நினைவுகூர முடியும். நான் அங்கே ஏறக்குறைய ஒரு வாரம் இருந்திருந்தேன் என்று ஊகிக்கிறேன். அங்கே ஒரு நீர்ப்பாசன குழியிலுள்ள தண்ணீரில் மூழ்கி மரித்துப்போன ஒரு சிறு பையன் இருந்தான். நான் அறிந்துள்ளபடி அவனுடைய பெற்றோர்கள் இப்பொழுது இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் அந்த தகப்பனார் அந்த (தரிசனத்தைக் குறித்த) செய்தியைக் கேள்விப்பட்டிருந்தார், அவர் தேவனுடைய அற்புதமான கிரியைகளைக் கண்டிருந்தார், சவங்களை புதைப்பவரோ அல்லது வேறு யாராவது அந்த பிள்ளையை எடுத்துச் செல்ல அவர் அனுமதிக்கவில்லை. நான் தரிசனத்தில் கண்டிருந்த அந்த பிள்ளை தான் அதுவென்று அவர் எண்ணினார்.

திரு.ஹக்ஸ்ட்ராவும் அவர்களில் பலரும் வெளியே போய், அந்த சிறு பிள்ளையை காண்பதற்காக என்னை அங்கு அழைத்துக் கொண்டு சென்றனர். நான் அந்த சிறு பிள்ளையைப் பார்த்த போது, அவன் உண்மையாகவே கறுத்த தலைமுடியை கொண்டிருந்தான். அது (நான் தரிசனத்தில் கண்ட) அவனல்ல. அந்த சிறு பையன் நன்றாக உடுத்தியிருந்த ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறு வயதான ஒருவனாயிருந்தான். மேலும் அது பாறை பிரதேசமான ஒரு தேசமல்ல. ஒரு சில தைலந்தரும் தேவதாரு வகை மரங்கள் அல்லது ஏதோவொரு வகையான மரங்கள் அங்கே நின்று கொண்டிருந்தன என்று நான் எண்ணுகிறேன்.

நான், ''இல்லை, இது அந்தப் பையன் அல்ல. நான் வருந்துகிறேன், இது அந்தப் பையன் அல்ல'' என்றேன். அந்தத் தகப்பனின் ஆறுதலுக்காகவும் மற்றவர்களுக்காகவும் நான் முழங்கால்படியிட்டு ஜெபித்தேன். எனவே அவர்கள் - சடலங்களை புதைப்பவர் அந்தச் சிறு பையனை எடுத்துச் சென்று அவனை அடக்கம் செய்தனர். நான், ''இது

அந்தச் சிறு பையனல்ல, அந்த பையன் வித்தியாசமானவன்'' என்றேன்.

பிறகு நான் அந்த இரவில் கூட்டத்திற்கு வந்து, நான் அந்த சிறு பையனை பார்த்ததாகவும் ஆனால் அது தரிசனத்தில் பார்த்த பையன் அல்லவென்றும் கூட்டத்தினரிடம் விளக்கினேன். அவர்கள் அங்கே அவனை வெளியே ஏதோவொரு வழியில் கூடாரத்தின் பின்புறமாக, ஒரு வயல்வெளியினூடாக திரும்ப கொண்டுசென்றனர். எனவே அது அந்தச் சிறு பையனல்ல. அவன் சிறிது நேரமாகவே தண்ணீரில் கிடந்திருந்தான். அவர்கள் அவனை வெளியே இழுத்தனர். ஆனால் அந்தத் தகப்பனோ அவனை அவர்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை.

அதன்பிறகு நான் சென்று கொண்டேயிருந்தேன். நான் என்னுடைய காரில் மியாமியிலிருந்து புறப்பட்டு அந்த தேசத்தை கடந்து வெஸ்ட் கோஸ்ட்டுக்குச் சென்றேன். வழிநெடுக ஒவ்வொரு இடத்திலும் ஜனங்கள் அதைத் தங்களுடைய வேதாமத்திலுள்ள அட்டையுடன் ஒட்டப்பட்டிருக்கும் தனித்தாளில் (flyleaf) எழுதிவைக்குமாறு ஜனங்களிடம் கூறிக்கொண்டிருந்தேன். நான், “அவர் என்னிடம் கூறி சம்பவிக்காத ஒரே காரியம் இது மட்டுமே. இது சம்பவித்தே ஆக வேண்டும் என்றேன்.

நான் கனடா வழியாக கடந்து சென்றேன், கனடாவை கடந்து வின்ட்ஸர், அன்றாரியோ வழியாக ஈஸ்ட் கோஸ்ட் வழியாக திரும்பி வந்து இது சம்பவிக்கப் போகிறது என ஜனங்களிடம் கூறிக்கொண்டிருந்தேன்... நான் அனேகமாக ஒவ்வொரு கூட்டத்திலும் அதை தெரிவித்தேன். அவர்களிடம், “உங்களுடைய வேதாகமங்களின் அட்டையுடன் ஒட்டப்பட்டிருக்கும் தனித்தாளில் (flyleaf) அதை எழுதி வையுங்கள்'' என்று கூறிக்கொண்டிருந்தேன். அவர்களில் நூற்றுக்கணக்கான நூற்றுக்கணக்கான பேர், நூற்றுக்கணக்கான நூற்றுக்கணக்கான பேர் தங்களுடைய வேதாகமங்களின் அட்டையுடன் ஒட்டப்பட்டிருக்கும் தனித்தாளில் அதை எழுதி வைத்தனர். நல்லது, அந்த வருடம் கடந்து சென்றது. மற்றொரு வருடமும் கடந்து சென்று விட்டது. எதுவும் சம்பவிக்கவில்லை. ஆனால் எப்படியாயினும் அது சம்பவிக்க வேண்டியிருந்தது. ஒரு நாள் இரவில் நான் பின்லாந்துக்கு சென்றேன்,



சிறுபையனின் முகத்தின் மேல் மூடியிருக்கும் துணியை மீண்டும் ஒருமுறை அகற்றுவீர்களா என வியப்படைகிறேன்'' என்றேன். எனவே அவர்கள், “சரி, இப்பொழுது அந்த பையனை நீர் காரில் ஏற்றும்படி அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் அவனை இங்கிருந்து அப்பால் கொண்டு செல்ல போகின்றார்கள்'' என்று கூறினர். அங்கிருந்த ஜனங்கள் அலறிக் கூச்சலிட்டு அழுதுகொண்டு போய்க் கொண்டிருந்தனர்.

நான் மீண்டும் கீழே உற்றுப் பார்த்தேன். இப்பொழுது, நான் எனக்குள்ளாக மிகவும் உணர்ச்சிவசப்பட்ட பரபரப்பான நிலையில் இருந்தேன். நான் அதை இழந்து விட்டிருப்பேன் (நீங்கள் பாருங்கள்?) ஆனால் தேவனுடைய இராஜாதிபத்தியத்தை பாருங்கள். நான் கீழே நோக்கிப் பார்த்தேன்.”நான் இந்த பையனை எங்கேயோ பார்த்திருக்கிறேனே'' என்று கூறினேன். நான், “திருமதி.ஐசக்ஸன், இங்கே வாருங்கள்'' என்றேன். மேலும் நான், “இந்தச் சிறு பையன் ஜெப வரிசையில் இருந்ததுண்டா என்று அந்த மேய்ப்பர்களிடம் கேட்டுப் பாருங்கள்'' என்று கூறினேன். நான் அந்த தரிசனத்தைக் குறித்தே மறந்து விட்டிருந்தேன். பாருங்கள்? அவர்கள், “இல்லை'' என்றனர். யாருக்குமே அவனை தெரிந்திருக்கவில்லை. நான், “யாருக்காவது அவனை தெரியுமா?'' என்று கேட்டேன். யாருக்குமே அவனை தெரிந்திருக்கவில்லை. நான், “நல்லது, இது வினோதமாக உள்ளது, நான் இந்தச் சிறுபையனை எங்கேயோ பார்த்திருக்கிறேன்'' என்றேன். நான் இதைப் போன்று என்னுடைய தலையை உயர்த்தினேன். பாறைகள் நிறைந்த பள்ளத்தாக்கும் பசுமையான மரங்களும் அங்கே இருந்தன. நான் மீண்டும் பின்னால் திரும்பிப் பார்த்தேன். நான்,”அங்கிருப்பது அவன் தான். அது அவனே'' என்று கூறினேன். நான் ,”சகோதரன் மூர், சகோதரன் லின்ட்சே, அருகில் வாருங்கள்.உங்கள் வேதாமத்தை திறந்து பாருங்கள்'' என்றேன். அவர்கள், “என்ன விஷயம்?'' என்று கேட்டனர். நான்,”உங்கள் வேதாகமத்தின் அட்டையுடன் ஒட்டப்பட்டிருக்கும் தனித்தாளுக்கு (flyleaf) திருப்புங்கள்'' என்றேன். நான், “மியாமி, ஃபுளோரிடாவில் அன்றிரவு அந்த சிறு பையனை குறித்து சொன்னது ஞாபகம் உள்ளதா?'' என்று கேட்டேன். அவர்கள், “ஆம்'' என்றனர். “பழுப்பு நிற

அவர்கள் தேவனையே நம்புகின்றனர். அவர்கள் சரியாக அந்த போர்க்களத்திலேயே ஜீவிக்கின்றனர். அங்கே மேலேயிருக்கும் கொஞ்சமான படைவீரர்களாகிய சிறிய பையன்களாகிய அவர்களில் சிலர் இதுவரை முகச்சவரம் கூட பண்ணியிராத பதினைந்து வயதான சிறு பையன்களாக இருக்கின்றனர். அவர்களை மிக சீக்கிரமாகவே கொன்று விடுகின்றனர். ரஷ்யர்களாகிய அவர்கள் அங்கே எப்படியாக வெளியில் இருக்கின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் ஒரு யுத்தத்தை அறிவித்து அவர்களைக் கொன்று போட்டனர். சென்ற யுத்தத்தின் போது ஜெர்மானியர்களும் மற்றவர்களும் அவர்களை பிடித்துக் கொண்டு சென்று விட்டனர். எனவே நான் காரைவிட்டு வெளியே சென்று அந்த சிறு பையன் கண்டபோது, என் இருதயமே வெடித்து விடுவதாக நான் எண்ணியதை உங்களிடம் கூறுகிறேன். நான் இதைப் போன்று சிறிது தூரம் நடக்கத் தொடங்கினேன். இப்பொழுது, இது ஒரு கற்பனை கதையாக உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் அது அப்படியல்ல, நண்பர்களே, நான் அந்த சிறு பையனை விட்டு சிறிது தூரம் செல்ல தொடங்கிய போது, யாரோ ஒருவர் என்னுடைய தோள் மீது தன்னுடைய கரத்தை வைத்தார். நான் கூறினேன்.... அது சகோதரன் லின்ட்சே என்று நினைத்து நான் திரும்பிப் பார்த்தேன். என்னைச் சுற்றிலும் யாருமில்லை, இருப்பினும் ஒரு கரம் என்னுடைய தோளின் மீது வைக்கப்பட்டிருந்தது.

நல்லது, நான், "நல்லது, இது வினோதமாயிருக்கிறதே, அது யாருடைய கரமாக இருக்கும்" என்று எண்ணினேன். அங்கே என்னைச் சுற்றிலும் யாருமில்லை. மேலும் நான், "நல்லது, இது என்னவென்று வியப்பாக உள்ளதே" என்று எண்ணினேன். நான் சிறிது தூரம் நடக்கத் தொடங்கினேன், நான் அப்படியே... அந்த கரம் அப்படியே என்னை இழுப்பது போன்று தோன்றியது. நல்லது, நான் சகோதரன் மூரை (Bro.Moore) நோக்கிப் பார்த்தேன், அவர், "என்ன விஷயம், சகோதரன் பிரான்ஹாம்?" என்றார். நான், "எனக்குத் தெரியவில்லை" என்று கூறினேன். அவர், "நல்லது, நீர் மிகவும் வெளிறிப்போய் காணப்படுகிறீரே" என்றார். நான், "எனக்கு தெரியவில்லை" என்று கூறினேன். எனவே நான் அந்த சிறு பையனை மீண்டுமாக உற்று நோக்கினேன். நான் அவனை நோக்கி நடக்கத் தொடங்கினவுடனே அந்த கரம் என்னை விட்டுப் போய்விட்டது. நான், "நீங்கள் அந்த



நான் கோபியோ (Kuopio) வரை சென்றடைந்தேன்.

*சகோதரன் பிரான்ஹாமும் மற்றவர்களும் 1950 ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் பின்லாந்தை அடைகின்றனர்*



நான் அதிகமாக உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் அங்கே சிகரத்தின் மேலே இருந்தேன், அங்கே மேலேயிருந்த கொஞ்சமான பின்லாந்து நாட்டார் மிகவும் அன்புள்ள இனிமையான ஜனங்கள், லாப்லாந்து (Laplanders) நாட்டவர்களும் மற்றும் எல்லோருமான அனேக ஆயிரக்கணக்கான ஜனங்களை அந்தக் கூட்டத்தில் நாங்கள் கொண்டிருந்தோம். எனவே நாங்கள் மேலே சென்றோம்...ஏறக்குறைய முப்பது ஊழியக்காரர்கள், அந்த சிகரத்தில் உள்ள தங்களுடைய சிறு பட்டணங்களில் எங்கெல்லாம் ரஷ்யர்கள் குண்டு போட்டு தகர்த்தார்கள் என்றும் மற்ற காரியங்களையும் என்னிடம் காட்டினார்கள்.

இந்நிலையில் நான் அந்த சிகரத்தின் கீழ்ப்பகுதிக்கு கீழிறங்கி வந்து, நான் அப்படியே அழத்தொடங்கினேன். ஏனென்று எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு சில நாட்களாகவே உபவாசத்தில் இருந்திருந்தேன். நான் பசியாயிருப்பதாக உணரத் தொடங்கினேன்.

வழக்கமாக உபவாசத்தின் போது, நான் பசியை உணருவதேயில்லை. நீங்கள் பசியாயிருப்பதாக உணருவீர்களானால், சாப்பிட வேண்டிய நேரம் அதுவே. அது சரியே. அதற்குப் பிறகு இயேசுவுக்கு பசியுண்டாயிற்று. நீங்கள் பாருங்கள்? நீங்கள் பசியாயிருப்பீர களானால் ஆகாரம் புசிக்க வேண்டிய நேரம் அதுவே. இவ்வாறாக, பிறகு நான் ஒருவாறாக பசியடையத் தொடங்கினேன். சகோதரன் லின்ட்சே, "சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் சாப்பிட வருகிறீர்களா?" என்றார்.

நான், "இல்லை. நான் சாப்பிடுவது போன்று உணரவில்லை, ஆனால் சகோதரன் லின்ட்சே, எங்கோ ஏதோ காரியம் -ஏதோ காரியம் உள்ளது" என்றேன். நான் அங்கே நடந்து சென்று, அங்கே வெளியே ஒரு மனிதர் நின்றுகொண்டிருப்பதை நான் கண்டேன், அவர்கள், "கொல்கதாவிலே" என்று பாடிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய எல்லா பாடல்களும் இருவகை கிளைச்சுரத் தொகுதிகளில் ஒன்றாக இருந்ததுமல்லாமல் மிகவும் அருமையாகவும் இருந்தன. இவ்வாறாக நான் அப்பாடல்களைக் கேட்டேன். அந்த நபரும் அவர்களை பார்த்தவாறே அங்கே நின்று கொண்டிருப்பதை கண்டேன். நான் அங்கே சென்றேன். அது பொருட்களை வாங்குவதற்கு, இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்த ஒரு மனிதர், அவர் எவ்வளவு குடிக்க முடியுமோ அவ்வளவு குடித்தவராக அங்கே மேலே இருந்தார்.

அவர், "அவர்கள் அங்கே மேலே என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?" என்று கேட்டார். "நீங்கள் ஆங்கிலம் பேசுகிறீர்களே" என்று நான் கூறினேன். அவர், "நான் ஒரு ஆங்கிலேயன்" என்றார். நான், "ஏன், அவர்கள் ஒரு கிறிஸ்தவ துதிப்பாடலை பாடிக்கொண்டிருக்கிறார்கள்" என்றேன். அவர், "அது செவிக்கு இனிமையாக ஒலிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்றார். நான், "நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?" என்றேன். அவர், "இல்லை. எனக்கு அதில் நம்பிக்கை கிடையாது" என்றார்.

நான், "நல்லது, நீங்கள் கட்டாயம் அதைக் குறித்து வெட்கப்பட்டாக வேண்டும்" என்றேன். நான், "ஒரு மனிதன் நீங்கள் ஜீவித்திருப்பது போன்று அதிக காலம் ஜீவித்திருக்கலாம், ஆனால் தேவனே தாம் கொண்டுள்ளபடியான ஆரோக்கியத்தை உங்களுக்கு அருளுபவர்,





என்றேன். "ஏழையான அந்த சிறு பையன் அப்படியே கூழாக்கப் பட்டுள்ளான்" என்றார். நான், "அது அதிக மோசமானது என்று நிச்சய மாயிருக்கிறேன்" என்றேன். "இப்பொழுது, அந்த பெற்றோர்கள் இங்கே வந்து சேரும் போது, அவர்கள்... நாம்-நாம் அவனை தூக்கி, பட்டணத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. அவர்களுக்கு நம்முடைய கார் தேவைப்படுகிறது. ஏனெனில் வேறொரு காரை எங்கிருந்து கொண்டு வர வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியவில்லை" என்றார். எனவே நான், "சரி, நாம் அவனை தூக்கலாம்" என்றேன். அவர்கள், "நல்லது..." என்றனர். நான், "நல்லது, நான் அந்தப் பையனை ஒரு முறை பார்ப்பேன் என்று நம்புகிறேன்" என்று எண்ணினேன். நான் காரை விட்டு வெளியே சென்று அந்த சிறு பையனை நோக்கிப் பார்த்தேன், ஓ, அவனுடைய வாய் திறந்திருந்தது, அவனுடைய சிறு கண்கள் இதைப் போன்று உள்ளே தள்ளப்பட்டிருந்தது. மேலும் நான்... அவர்கள் ஒரு மேலாடையை அவனுடைய முகத்தின் மேல் விரித்திருந்தனர். நான், "ஓ, என்னே, உம். அங்கே வயல்வெளியில் வேலை செய்து கொண்டிருக்கும் அந்த ஏழையான தாயும் தகப்பனும் இந்த ஏழையான சிறு பையன் இதைப் போன்று இங்கே கிடப்பகை வந்து காண்பார்களானால் அது என்னவாக இருக்கும்..." என்று நினைத்தேன்.

அந்த பின்லாந்து தேசத்தார் ஏழைகளாக இருந்தனர். அவர்கள் நமக்கு செலுத்தும் கடன் ஒன்றே ஒன்று மாத்திரமே, அது அவர்களுடைய யுத்தத்தினால் ஏற்பட்ட கடன் தான். நீங்களெல்லாரும் அந்த காரியங்களை அறிவீர்கள். அவர்கள் நேர்மையும் உண்மையுள்ள ஜனங்களாவர். பின்லாந்தில் வசிக்கும் உலகிலுள்ள யாருமே தேவனுக்கு பயப்படுபவர்கள் தான்... அவர்கள் உண்மையிலேயே தேவனுக்கு பயப்படும் ஜனங்கள். அவர்கள் கொண்டிருக்கும் ஒவ்வொன்றிற்கும், அவர்கள் தேவனையே நமபிக்கொண்டுள்ளனர்.

சவங்களைப் புதைப்பவர் அவனை எடுத்துக்கொண்டு செல்லும்படி கூறவேண்டியிருந்தது.

அங்கே ஒரு சட்டம் இருந்தது, அவர்கள் அதைச் செய்வதற்கு முன்பு, அந்த பெற்றோர்கள் அதனுடன் ஏதோவொன்றை செய்ய வேண்டியிருந்தது. எனவே அவர்கள் அந்த பெற்றோர்களை அழைத்து வரும்படி வெளியே அந்த நாட்டுப்புறங்களின் வயல்வெளிக்குச் சென்றனர்.

நாங்கள் அங்கே வந்து சேர்ந்தோம். அந்த சந்தடிக்கான காரணம் என்னவென்று நாங்கள் வியப்படைந்தோம். நல்லது, நாங்கள் காரை நிறுத்தினோம். என்னுடைய மொழிபெயர்ப்பாளர் காரை விட்டு வெளியேறி, அது என்னவென்று கவனித்தார். எனவே அவர்கள், "ஓ, ஒரு சிறு பையன் இங்கே கொல்லப்பட்டு கிடக்கிறான்" என்றனர்.

திருமதி. ஐசக்ஸன் தான் என்னுடைய மொழிபெயர்ப்பாளராக இருந்தார், என்னுடைய தனிப்பட்ட மொழிபெயர்ப்பாளர். எனவே அவள்-அவள் திரும்பி வந்து, "சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் அதைக் கட்டாயம் பார்த்தாக வேண்டும்" என்றாள். எனவே சகோதரன் லின்ட்சே காரை விட்டு வெளியே வந்தார். உங்களில் அனேகருக்கு கார்டன் லின்ட்சேவை தெரியும் என்று நிச்சயமாயிருக்கிறேன், அவர் "சுகமளித்தலின் சத்தம்" பத்திரிகையின் ஆசிரியர். அவர் வெளியே சென்று ஒரு குழந்தையைப் போல அழுதுகொண்டே திரும்பி வந்து, "சகோதரன் பிரான்ஹாம், போய் அவனைப் பாருங்கள், அது என்னுடைய சிறு பையனை எனக்கு ஞாபகப் படுத்துகிறது" என்றார்.

நான், "நல்லது, சகோதரன் மூர், நான் அவனைப் பார்க்க விரும்பவில்லை" என்றேன். எனவே சகோதரன் மூர் காரை விட்டு வெளியேறினார். நான் இங்கே ஒரு பையனை கொண்டிருந்தேன், என்னால் அதை காண முடியவில்லை... நான் வீட்டை விட்டு வந்து வாரக்கணக்கான நாட்கள் ஆகியிருந்தது. பில்லிபால் அப்படியே ஏறக்குறைய அந்த வயது உள்ளவனாயிருந்தான். எனவே அந்த சிறு பிள்ளையை நான்-நான் காணும்படி செல்ல விரும்பவில்லை. எனவே சகோதரன் மூர் வெளியேறி, அவர் அழுது கொண்டே திரும்பி வந்து, "சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் அதைக் கண்டிருக்க வேண்டும்" என்றார். "நான்-நான் அதைப் போன்ற எதையும பார்க்க மாட்டேன்"



அப்படியிருந்தும் நீங்கள் இதைப் போன்ற குற்றங்கண்டுபடிப் பவராயிருக்கிறீர்கள்" என்றேன். ஏறக்குறைய பத்து நிமிடங்களுக்குப் பிறகு, அவர் இயேசு கிறிஸ்துவை தம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி நான் அவரை வழிநடத்தினேன்.

அவர்கள் கீழிறங்கி வந்தனர், நாங்கள் அங்கேயே முழங்கால்படியிட்டு ஜெபித்தோம். அவர்கள் சில படங்களை எடுக்க தொடங்கினர். அங்கே அவர்களுடைய வாடகை வண்டி என்பது குதிரை சவாரி தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே அவர்கள்...சகோதரன் லின்ட்சே இந்த வாடகை காரில் என்னை வைத்து என்னுடைய படத்தை எடுக்கும்படி, அந்த சிறிய இடத்திற்கு என்னை கொண்டு போக விரும்பி, "நாங்கள் உம்மை ஒரு காரில் அழைத்து செல்லப் போகிறோம்" என்றார். அங்கே ஒரு சில கார்களே இருந்தன. அங்கே இரண்டாம் முறையாக (Second handed) விற்கப்படும் நான்கு அல்லது ஐந்து வருடங்கள் பழமையான ∴போர்டு காரானது இரண்டாயிரம் டாலர்களுக்கு விற்கப்படுகிறது. மேலும், ஓ, ஏறக்குறைய அரை காலன் அளவு பெட்ரோலானது (Gasoline) ஏறக்குறைய ஒரு டாலருக்கு விற்கப்படுகிறது. அரை காலன் பெட்ரோலானது இரண்டு டாலர்களுக்கு விற்கப்படுகிறது, (அதைப் போன்ற ஏதோவொன்று). எனவே அது எப்படியென்று உங்களால் கற்பனை செய்ய முடியும். அந்த ஏழையான கொஞ்சமான பின்லாந்து நாட்டவர்களுக்கு எந்த பண வருமானமும் கிடையாது.



அப்போது நான், “ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது” என்றேன். சகோதரன் லின்ட்சே, “நல்லது, நீங்கள் அதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள், சகோதரன் பிரான்ஹாம்?” என்றார்.

நான், “எனக்குத் தெரியாது. அது அப்படியே... கர்த்தருடைய ஆவியானவர் ஏதோ காரணத்தால் அருகில் இருக்கிறார் என்பதை என்னால் கூற முடியும். ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது” என்று கூறினேன். நல்லது, அவர்”உங்களுக்கு அதைக் குறித்து ஏதேனும் அபிப்பிராயம் உண்டா?” என்று கேட்டார். நான்,”இல்லை. எனக்கு அதைக் குறித்து எந்த அபிப்பிராயமும் கிடையாது” என்றேன்.

நாங்கள் காரில் ஏறி அந்த மலையிலிருந்து கீழேயிறங்கத் தொடங்கினோம். நான் அங்கேயிருந்த சந்தடியைக் கண்டேன், ஆனாலும் அங்கே மலையின் கீழே என்ன சம்பவித்தது என்பது எனக்குத் தெரியாது. அங்கேயிருந்த 1935-ம் வருஷத்து ஃபோர்டு கார் அதாவது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஃபோர்டு காருக்கு என்ன சம்பவித்தது. அங்கே பிள்ளைகள் வந்து கொண்டிருந்தனர்.

இப்பொழுது, பின்லாந்து தேசத்தார் அனைவரும் சிறிய பட்டணங்களில் தான் வசிக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வயல்வெளி நிலங்களை வெளியே கொண்டிருக்கின்றனர். அவர்கள் நாட்டுப்புறங்களிலும் வயல்களிலும் வேலைக்குச் சென்று விட்டு அதன்பிறகு பட்டணத்திற்குத் திரும்புகின்றனர். அவர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடத்தை விட்டு வந்துகொண்டிருந்தனர்... அங்கே கார்கள் மிகவும் அரிதாக காணப்படுகிறது. இந்த மனிதன் ஏறத்தாழ மணிக்கு அறுபது மைல் வேகத்தில் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். இந்த பிள்ளைகள் கூட்டமாக வரும் இடத்தில் காரை ஓட்டிக்கொண்டிருந்தான். கார் கட்டுப்பாட்டை இழந்தது.

இரண்டு சிறுபிள்ளைகள் சாலையை கடக்க ஆரம்பித்தனர், ஒருவனுக்கு ஏறக்குறைய ஐந்து வயது, மற்றொரு பிள்ளைக்கு சுமார் எட்டு வயது. அந்த இரண்டு பிள்ளைகளும் சாலையை கடக்க ஆரம்பித்தனர், விரைந்து வந்த வாகனத்தைக் கண்ட அவ்விரு பிள்ளைகளும் பயமடைந்து பின்னால் செல்லத் தொடங்கினர். காரின் ஓட்டுனர் கட்டுப்பாட்டை இழந்து அவர் தன்னுடைய காரை திடீரென்று எதிர்திசையில் அதாவது வலப்பக்கத்திற்கு திருப்பினார். அது



கிழக்குத் திசையாக இருக்க வேண்டும், அப்பொழுது அவர் அதில் ஒரு பையனை காரினால் இடித்ததால் இதைப் போன்று கார் சக்கரத்தில் தள்ளப்பட்டான்.

மற்றொரு சிறு பையனோ காரின் முன்பாகம் (fender) அவனுடைய முகவாய்க்கட்டையில் இடித்து, அவன் அப்படியே மேலே தூக்கி வீசப்பட்டு ஒரு மரத்தின் மேல் எறியப்பட்டான். அப்படியே மரத்தின் மீது தூக்கி வீசப்பட்டு நொறுக்கப்பட்டான். அவன் அப்படியே... அது அப்படித்தான் சம்பவித்தது. இது இவ்விதமிருக்க மற்ற சிறு பையனின் மேலே கார் ஏறி, அந்த காரின் கீழே அவன் கூழாக்கப்பட்டான், காரானது பள்ளத்துக்குள் விழுந்தது. அந்த சிறு பையன் கார் சக்கரத்திற்கு கீழ் நசுக்கப்பட்டு காயமடைந்து அவனுடைய சிறு சரீரம் ஏறக்குறைய இருபது அடிதூரம் அந்தரத்தில் தூக்கி வீசப்பட்டு அவன் புல்வெளியில் விழுந்துக்கிடந்தான்.

நாங்கள் அங்கே சென்றடைந்த போது, அந்த சாலை கடினமானதாகவும், குண்டும் குழியுமாக அரைகுறையாகவும் பழையதாகவும் காணப்பட்டது. அங்கு முழுவதும் பரபரப்பாக காணப்பட்டது. ஒரு சிறு பையன் கொண்டு செல்லப்பட்டிருந்தான். காரானது சேதமடைந்ததாய் பள்ளத்தில் கிடந்தது, இப்படியிருக்க அந்த மனிதன் மயக்கமடைந்து நினைவிழந்து காணப்பட்டான். அவர்கள் அவனை காரை விட்டு வெளியே கொண்டு வந்திருந்தனர். அந்த சிறு பையனோ அந்த புதரிலேயே கிடந்தான். இந்த மற்ற பையன் மரித்துப்போயிருந்தான். அவன் மரித்தவனாக ஏறக்குறைய இருபது அல்லது முப்பது நிமிடங்களாக கிடந்திருந்தான்.

அவர்கள் யாரோ ஒருவரை அழைத்துக்கொண்டு வந்து, அந்த மற்றொரு சிறு பையனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது, ஆனால் அவர்கள் இந்த சிறுவனை அசைக்க முடியவில்லை. அந்த சிறு பையனுக்கு மூச்சு இருந்தது, எனவே அவர்கள் அவனை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடிந்தது, ஆனால் இந்த பையன் மரித்திருந்தான். சவத்தை புதைப்பவர் இங்கே அவர்கள் செய்வது போன்றே அதை வெளிப்படையாக கூறவேண்டியிருந்தது, அவர் (undertaker) வந்து அவனை அங்கிருந்து வெளியே கொண்டு போக வேண்டியிருந்தது. மருத்துவர் அதனுடன் போக வேண்டியிருந்தது. மருத்துவர் அதனுடன் செய்வதற்கு எதுவுமில்லை, ஏனெனில் அவன் மரித்து விட்டான்.